**26.10.2021**

**அ.வ.எண்.294/2015**

**குறுக்கு விசாரணை வா.சா.1**

எந்த சர்வே எண்ணிற்கு உட்பட்ட சொத்திற்கு செல்வதற்கு பிரதிவாதிகள் தடுத்ததாக இவ்வழக்கினை நான் தொடர்ந்துள்ளேன் என்றால் சர்வே எண்கள் 170/6, 170/7, 170/8 க்கு உட்பட்ட சொத்துக்கு செல்வதை பிரதிவாதி தடுத்தார். எனது சொந்த ஊர் கோழியாளம் கிராமம் என்றால் எனது தாத்தா ஊர் கோழியாளம் ஆகும். அங்கு எங்களுக்கு வீடு உள்ளது. நான் வசிக்கும் கிராமம் பாப்பநல்லூர் ஆகும். அங்கேயும் எனக்கு வீடு உள்ளது. பாப்பநல்லூர் கிராமத்தில் நான் வசிப்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மின்அட்டை, மின் கட்டண ரசீது, நிலவரி, குடும்ப அட்டை, வீட்டு வரி ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். நான் சென்னைக்கு சென்று சுமார் 20 வருடங்கள் இருக்கும் என்றால் சரியல்ல. எனது குழந்தைகளின் படிப்பிற்காக சென்னைக்கு செல்வேன் இங்கு உள்ள வீட்டிலும் இருப்பேன். ஆகையால் நான் சென்னைக்கு முழுவதாக செல்லவில்லை. ஆதார் அட்டை சென்னை முகவரியில் தான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 பழைய குடும்ப அட்டை என்றால்

சரியல்ல. தற்போது உள்ள ஸ்மார்ட்கார்டு கூட நான் பெற்றுள்ளேன். தேசரெட்டியார் மற்றும் கந்தப்ப ரெட்டியார் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். 2ம் வாதியான லட்சுமிகாந்தனின் தந்தை தான் தேசரெட்டியார் என்றால் சரிதான். ஆகையால் 2ம் வாதி எனது பங்காளி உறவு முறை என்றால் சரிதான். தேசு ரெட்டியார் மற்றும் கந்தப்ப ரெட்டியார் அவர்களிடையே குடும்ப சொத்து சம்பந்தமாக பாகபிரிவினை செய்து கொண்டார்களா என்றால் செய்து கொண்டார்கள் என்னிடம் விவசாய நிலம் உள்ளது. தாவா சொத்தின் பழைய புலவரைபடம் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 புலவரைபடம் 2016ம் ஆண்டு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். புலவரைபடம் வா.சா.ஆ.4ல் 170/13 வடக்கு தெற்காக தார் சாலை என்றால் சரிதான். தார்சாலைக்கு மேற்கு பக்கத்தில் சர்வே எண் 170/11 பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு மேற்கு பக்கத்தில் சர்வே எண் 170/10 காலிமனை மேலும் சர்வே எண் 170/9ம் காலி மனை என்றால் சரிதான். சர்வே எண் 170/8ல் வீடு முதலில் இருந்து களம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தற்போதும் வீடு உள்ளது. சர்வே எண் 170/6 மற்றும் சர்வே எண் 170/7ல் வீடு இருந்தது பின்பு களம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தற்போது வீடு உள்ளது. நீதிமன்ற ஆணையர்

நியமிக்கபட்டு அங்கு வீடு உள்ளதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். சர்வே எண் 170/6, 170/7,170/8ன் வடக்கு பகுதியில் உள்ள நிலம் எனக்கு சொந்தமானதா என்றால் ஆமாம் அங்கு மாட்டு கொட்டகை, வைக்கோல் போர் உள்ளது. அந்த இடத்தில் பொது மக்களின் இடம் இல்லை என்றால் சரிதான் அந்த இடம் எனக்கு மட்டும் சொந்தமானதாகும். வேறு நபர்களின் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் கோரி உள்ள பொது வழி மூலமாக தான் மக்கள் ஏரியில் இருந்து தண்ணீர் கொண்டு செல்வார்கள். வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை சாட்சியம் ஒத்திவைக்கபடுகிறது.